டுவென்டிபர்ஸ்ட் செஞ்சுரி மானேஜ்மெண்ட் சர்வீசஸ் லிமிடெட்
CIN: L74210TN1986PLC012791
பதிவு அலுவலகம்: எண் 67, பழைய எண் 28–ஏ, கதவு எண் G–3
எல்டாம்ஸ் சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை 600018
தொலைபேசி: 044–24330006,
மின்னஞ்சல்: tcmsltdcs@gmail.com வலைத்தளம்: www.tcms.bz

# தபால் வாக்கு அறிவிப்பு

ஏ. **திருமதி. ராகவன் சுகுணா கூடுதல் இயக்குநராக** நிர்வாகமற்ற சுயேச்சை இயக்குநராக 18 ஏப்ரல் 2022 முதல் 5 ஆண்டுகளுக்கு நியமனம்.

பி. திருமதி. **தீப்தி D. சக்பால்,** 18 ஏப்ரல் 2022 முதல் 5 ஆண்டுகளுக்கு, நிர்வாகமற்ற சுயாதீன இயக்குநராக மீண்டும் நியமனம்.

ஆகியவற்றை சிறப்பு தீர்மானங்கள் மூலமாக தபால் வாக்கு மூலமாக நிறைவேற்றுவதற்கு, கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 110 மற்றும் கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014ன் விதி 22 (''விதிகள்'') மற்றும் திருத்தப்பட்ட செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 44 (''செபி பட்டியல் கட்டுப்பாடுகள்'') மற்றும் கோவிட்–19 தொற்று நோய் மற்றும் பொருந்தக்கூடிய பிற விதிகள் மற்றும் நிபந்தனைகளை கருத்தில் கொண்டு மின்னணு வாக்குப்பதிவு மூலம் பொதுக் கூட்டங்களை நடத்துதல்/தபால் வாக்குச் சீட்டுச் செயல்முறைகளை நடத்துவதற்காக இந்திய அரசாங்கத்தின் கார்ப்பரேட் விவகார அமைச்சகம் ("எம்சிஏ") வெளியிட்ட தொடர்புடைய சுற்றறிக்கைகளின்படி ("எம்சிஏ சுற்றறிக்கைகள்") தபால் வாக்கு நடைமுறை மூலமாக (மின்னணு வாக்குப்பதிவு உள்பட) உறுப்பினர்களின் ஒப்புதலை கம்பெனி கோருகிறது என்று டுவென்டிபர்ஸ்ட் செஞ்சுரி மானேஜ்மெண்ட் சர்வீசஸ் லிமிடெட்டின் (''நிறுவனம்'') உறுப்பினர்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

வெள்ளிக்கிழமை, 15 ஏப்ரல் 2022 அன்று அலுவல் நேரம் முடிவடையும் வரை கம்பெனியினால் பராமரிக்கப்படும் உறுப்பினர் பதிவேட்டில் கண்டுள்ள பெயர்களில் உள்ள அனைத்து பங்குதாரர்களுக்கும் தபால் வாக்கு அறிவிப்பு, விளக்க அறிக்கையுடன் தபால் வாக்கு படிவம் ஆகியவற்றை அனுப்பும் பணியை கம்பெனி 20 ஏப்ரல் 2022 அன்று முடித்துள்ளது. வெள்ளிக்கிழமை, 15 ஏப்ரல் 2022 அன்று வரை உறுப்பினரின் பெயரில் பதிவு செய்யப்பட்ட சமபங்குகளின் செலுத்தப்பட்ட மதிப்பின் விகிதத்தில் வாக்களிக்கும் உரிமைகள் கணக்கிடப்பட்டுள்ளன. விளக்க அறிக்கையுடன் தபால் வாக்கு அறிவிப்பு கம்பெனியின் வலைத்தளம் www.tcms.bzல் கிடைக்கிறது.

தபால் வாக்குப்பதிவு மற்றும் மின்னணு வாக்குப்பதிவு நடைமுறைகள் நியாயமாகவும் வெளிப்படையான முறையிலும் நடைபெறுவதை ஆராய Mrs. லட்சுமி சுப்ரமணியன் M/s. லட்சுமி சுப்ரமணியன் அண்ட் அசோசியேட்ஸ்,

பிராக்டிசிங் கம்பெனி செயலாளர்கள் அவர்களை ஆராய்வாளராக கம்பெனி நியமனம் செய்துள்ளது.

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 108, கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014 மற்றும் அவ்வப்போது திருத்தப்பட்ட செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2014ன் விதி 44ன்படி, உறுப்பினர்களுக்கு மின்னணு வாக்குப்பதிவு வசதியை கம்பெனி அளிக்கிறது. உறுப்பினர்கள் மின்னணு முறையில் வாக்களிக்கப்பதற்கான வசதியை M/s. லிங் இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட் (LIIPL), கம்பெனியின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவர் ("RTA") அளிக்கும்.

மின்னணு வாக்குப்பதிவு திங்கட்கிழமை, 25 ஏப்ரல் 2022 அன்று காலை 9.00 மணிக்கு தொடங்கி செவ்வாய்கிழமை, 24 மே 2022 அன்று மாலை 05.00 மணிக்கு முடிவடைகிறது. இந்த காலகட்டத்தில், கம்பெனியின் தகுதியான உறுப்பினர்கள் மின்னணு மூலம் வாக்களிக்கலாம். அதன் பின்னர் மின்வாக்குப்பதிவு முறை LIIPL–லினால் நிறுத்தப்படும். காகித தபால் வாக்கு படிவம் மூலம் அல்லது தபால் வாக்குப்பதிவு நடைமுறைகள் சம்பந்தமாக ஏதேனும் கேள்வி/குறைகள் இருப்பின் அது குறித்து https://instavote.linkintime.co.inக்கு மின்னஞ்சல் அனுப்பலாம் அல்லது திரு.ராஜீவ் ரஞ்சன், லிங்க் இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட், சி–101, 247 பார்க், L.B.S. மார்க், விக்ரோலி (மேற்கு), மும்பை 400 083 அவர்களுக்கு எழுதலாம்.

தபால் வாக்குப்பதிவு மற்றும் மின்னணு வாக்குப்பதிவின் முடிவு புதன்கிழமை, 25 மே 2022 அன்று கம்பெனியின் பதிவு அலுவலகம், எண் 67, பழைய எண் 28–ஏ, கதவு எண் ஜி–3 எல்டாம்ஸ் சாலை, ஆழ்வார்பேட்டை சென்னை 600018ல் அறிவிக்கப்படும். முடிவுகள் அறிவிக்கப்பட்டவுடன் உடனடியாக ஆராய்வாளர் அறிக்கையுடன் முடிவுகள் கம்பெனியின் இணையதளத்தில் (www.tcms.bz) கிடைக்கும். அதே நேரத்தில் மும்பையின் நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட் மற்றும் மும்பை பிஎஸ்இ லிமிடெட் ஆகியவற்றுக்கு தெரிவிக்கப்படும்.

**டுவென்டிபர்ஸ்ட் செஞ்சுரி மானேஜ்மெண்ட் சர்வீசஸ் லிமிடெட்டுக்காக**
**ஒப்பம்/–**

**இடம்: சென்னை** — **A.V.M. சுந்தரம்**
**தேதி: 21 ஏப்ரல் 2022** — **கம்பெனி செயலாளர்**